2004 நவம்பர் 18]

நண்பகல் 12-00

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி நேரங்கள் மாற்றி அமைக்கப்பட்ட பிறகு கிராமப்புற மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும் அந்தப் பள்ளிக்கூட நேரங்களை மாற்றி அமைத்ததால் ஏற்படுகின்ற சிரமங்களை விளக்கி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவிடம் பெற்றோர்களும், மாணவர்களும், ஆசிரியர் அமைப்புகளும் கோரிக்கை வைத்ததன் பேரிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த மாணவர்களுடைய, குறிப்பாக கிராமப்புற மாணவர்களுடைய சிரமங்களைப் போக்குவதற்காகவும், ஆசிரியர்களுடைய சிரமங்களைப் போக்குவதற்காகவும், பெற்றோர்களுடைய சிரமங்களைப் போக்குவதற்காகவும் அந்தக் கோரிக்கையினை ஏற்று அந்தப் பள்ளிகளுடைய நேரங்களை கிராமப்புறங்களிலும், சென்னையைத் தவிர்த்து மற்ற பள்ளிகளுடைய நேரங்களை காலை 9-30 மணியிலிருந்து அந்தப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படும் என்று உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

சென்னையைப் பொறுத்தவரை அந்தப் பள்ளிகள் அமைந்திருக்கின்ற இடத்தைப் பொறுத்து, போக்குவரத்து வசதிகளைப் பொறுத்தும், போக்குவரத்து நெரிசல்களைப் பொறுத்தும் அந்தப் பள்ளி நேரங்களை மாற்றி அமைப்பதற்கு காலை 8-30 மணி, 9-00 மணி, 9-30 மணி அளவிலே, கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த மூன்று மணி நேரங்களிலே மாற்றி அமைத்துக்கொள்ளலாம் என்று ஒரு option கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாணவர்கள், பெற்றோர்களின் நலன் கருதி இவ்வாறு பள்ளி நேரங்களை மாற்றி அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, இந்த ஆணை என்றிலிருந்து அமலுக்கு வரும் என்று கேட்டார்கள். இதய தெய்வம் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆணை உடனடியாக வருகின்ற திங்கட்கிழமையிலிருந்து அமலுக்கு வர ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், இனிக் கேள்வியே வேண்டாமே!

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். டாக்டர் மு. தம்பித்துரை.

டாக்டர் மு. தம்பித்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 159-வது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2005 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 78 முதல் 83 வரையிலான ஆறு அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.